







கிருஷ்ணகிரி முதல் நீலகிரி வரை மேற்கு மண்டலத்தில் உள்ள 21 கழக மாவட்டங்களில், 61 சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்களில் கிளைவார்டுகளுக்கும் பாகங்களுக்கும் இளைஞர் அணி நிர்வாகிகள் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியை மேற்கொள்ளும் வகையில், இளைஞர் அணி துணைச் செயலாளர்கள் 9 பேருக்கும் தலா 2 கழக மாவட்டங்கள் என பிரித்தளிக்கப்பட்ட நிலையில், அவர்கள் சம்பந்தப்பட்ட மாவட்டங்களில் இருந்து பெற்ற நிர்வாகிகள் பட்டியலை, இளைஞர் அணி தலைமையகமான ‘அன்பகத்தில்’ வழங்கி வருகின்றனர். அங்கு அவர்கள் மேற்கொண்ட பணிகளை, 13.10.2025 அன்று கழக இளைஞர் அணி செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் அறிக்கையாக வழங்கி, கள நிலவரம் குறித்து விளக்கினர். மேலும் இந்தக் கூட்டத்தில் மற்ற மண்டலங்களிலும் இந்த முறைப்படியே நிர்வாகிகளைத் தேர்வுசெய்யலாம் என முடிவு செய்யப்பட்டது.










கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களது அறிவுறுத்தலின் பேரில், கழக இளைஞர் அணிச் செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையில், 2026 சட்டப்பேரவைத் தேர்தல் பணிகள் குறித்து, புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகளுக்கான பயிற்சிப் பாசறைக் கூட்டங்கள், பகுதி வாரியாக நடைபெற உள்ளன. அந்த வகையில், சென்னை மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஆயிரம்விளக்கு சட்டப்பேரவைத் தொகுதியில் உள்ள ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதிக்கான பயிற்சிப் பாசறைக் கூட்டம் மாநில துணைச் செயலாளர் ஜோயல் முன்னிலையில், அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வருகின்ற 2026 தேர்தலை எப்படி எதிர்கொள்வது, அவற்றில் இளைஞர்களுக்கான பணிகள் என்ன, SIR போன்ற முன்னெடுப்புகளை எவ்வாறு எதிர்கொள்வது என்று தகவல்தொழில்நுட்ப அணி ஆலோசகர் கோவி. லெனின் இளைஞர்களிடம் எடுத்துரைத்துப் பேசினார். ஆயிரம் விளக்கு சட்டமன்ற உறுப்பினர் எழிலன் நாகநாதன், சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளர் சிற்றரசு, பிரகாஷ் உள்ளிட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் பகுதி செயலாளர் அன்பு துரை ஆகியோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர். மேலும் இந்நிகழ்வில் கலந்து கொண்ட புதிய நிர்வாகிகள் அனைவருக்கும் Minute Book வழங்கப்பட்டது.



பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் திரு.வி.க. நகர் மண்டலம், வார்டு76, செல்லப்பா தெருவில், கட்டப்பட்டு வரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் கட்டுமான பணிகளை அமைச்சர் பி.கே.சேகர்பாபு பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மேயர் திருமதி ஆர்.பிரியா, தாயகம் கவி எம்.எல்.ஏ., மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி, இந்து சமயம் மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு மற்றும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ்.முருகன் ஆகியோர் நேற்று (14.10.2025), செவ்வாய்க்கிழமை, காலை வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதி, மேடவாக்கம் டேங்க் ரோடு, அயனாவரம் தமிழ்நாடு மனநல மற்றும் மருத்துவ நரம்பியல் நிறுவனம் (TNIMHANS, Kilpauk) அருகாமையில் கட்டப்பட்டு வரும் வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதிகளை ஆய்வு மேற்கொண்டனர். வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, வீட்டு வசதித்துறை மேலாண்மை இயக்குனர் திரு கணேசன், தலைமை பொறியாளர் கண்ணன் உள்ளிட்ட அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.